விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 102 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 17 வியாழக்கிழமை (31.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நாட்டில் இன்றைய தினம்
# 13 மணிநேர மின்வெட்டு
### எதிர்வரும் நாட்களில் 15 மணிநேரம்

(கொழும்பு)
நாடு முழுவதும் இன்று வியாழக்கிழமை 13 மணி நேரம் மின்வெட்டு 15

# பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாடுகளிடையே ஒத்துழைப்பு அவசியம்
### பிம்ஸ்டெக் மாநாட்டில் ஜனாதிபதி கோட்டா



(கொழும்பு)
தற்போது நிலவுகின்ற உலகளாவிய நெருக்கடியினால் வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களை வளப்படுத்துவதற்கும் சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.
சவால்கள் இருந்த 15

### நெருக்கடியை சமாளிக்க
# சில நாடுகளுக்கு நாட்டை முடக்குக
### ராஜபக்ஷ அரசுக்கு யோசனை



(கொழும்பு)
**நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க சில நாட்களுக்கு நாட்டை முடக்குமாறு ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.**

எரிபொருள் தட்டுப்பாட்டால், மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மின்வெட்டால், வர்த்தக நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாத அச்சம் ஏற்பட்டுள்ளது. பல தொழில்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆகையால் சில நாட்களேனும் நாட்டை முழுமையாக மூடிவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக் 15

### முறிகண்டியில் விபத்து
# புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர் உயிரிழப்பு
### மூவர் படுகாயம்



(முறிகண்டி)
மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் ஏற்பட்ட விபத்து சம்பவத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந் 15

# கலந்துரையாடல்களுக்கு கோட்டா இடமளிப்பதில்லை
### முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில்

(கொழும்பு)
இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டதன் பின்னரே தான் நிம்மதியாக இருப்பதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு அரசியல்வாதியில்லை என்பதால், பிரச்சினைகள் ஏற்படும்போது கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு அவர் இடமளிப்பதில்லை என்றார்.
முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, 15

### வடக்கில் இன்று
# உஷ்ணம் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் இன்றைய தினம் உஷ்ண நிலை அதிகமாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
வடக்கு, வடமத் 15

### அச்சத்துடனே இங்கிருந்து செல்கின்றேன்
# நாளை என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது - அமைச்சர் ஹெகலிய

(கொழும்பு)
நாளை என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது எனச் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
மாத்தளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குபற்றியபோது அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
மேலும் அச்சத்துடனேயே இங்கிருந்து செல்வதாக அவர் கூறியுள்ளார்.
நாட்டின்தற்போதைய நிலைமை சவால்மிக்கது எனவும் இந்த நிலைமை குறித்து நன்றாகச் சிந்தித்துப் 15

### இணைய சேவையில் தடங்கல்
04 ஆம் பக்கம் பார்க்க

### விலை மாற்றம்
*அன்பு வாசகர்களே!*
காகிதாதிகள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதன் காரணமாக **01.04.2022** இல்இருந்து உங்கள் **வலம்புரி** நாளிதழின் விலை 40/= ரூபாயாகவும் **சங்குநாதத்தின்** விலை (ஞாயிறு வாரமலர்) 50/= ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகின்றது.
எமக்கு அப்பாற்பட்ட நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ள இவ்விலை அதிகரிப்பை ஏற்று, வழமைபோல் உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.
நிர்வாகம்
**வலம்புரி**

### பதவி விலகுவது முக்கியமல்ல
# பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே அவசியம்
### அமைச்சர் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)
தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசிலுள்ள எவரும் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
தன்னால் இன் 15

### பங்களாதேஷிடமிருந்து
# 250 மில்லியன் டொலர் கடன் கோரிய இலங்கை

(கொழும்பு)
பங்களாதேஷிடம் இருந்து மேலதிக நிதியுதவிக்கான இலங்கையின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளதாக பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஏ.கே. அப்துல் மொமன் கூறினார்.
நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாணய மாற்றமாக மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கோரியுள்ளது என்றார்.
பங்களாதேஷ்வங்கி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தால் நெருக்கடியிலிருந்து மீளலாம்


## பிரித்தானியாவிடம் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் மீளக் கட்டியெழுப்புவதற்கு நிலைபேறான மற்றும் திட்டமிடப்பட்ட வேலைத் திட்டம் அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அதனை சாத்தியப்படுத்த சரியான வழிகாட்டுதல் தற்போது நாட்டுக்குத் தேவை என்றும் பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன்னாள் பிரதி சபாநாயகருமான மைக்கல் மொரிஸ் நெஸ்பிரபுவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன்னாள் பிரதி சபாநாயகருமான மைக்கல் மொரிஸ் நெஸ்பி பிரபு மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று காலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே அவர் இந்த விடயத்தினை சுட்டிக் காட்டியுள்ளார்.



மூடநம்பிக்கைகளை தவிர்த்து அறிவியல் ரீதியாகவேயன்றி வேறு எந்த வகையிலும் நாட்டைக் கட்டியெழுப்புவது நடைமுறைச் சாத்தியமற்றது.

தவறான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் உட்பட அனைத்தும் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன மற்றும் நிரோஷன் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக

## செந்தில் தொண்டமான் தெரிவு



(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக செந்தில் தொண்டமான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக இருந்த இ.தொ.கா.வின் தலைமை பதவிக்கே செந்தில் தொண்டமான் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நேற்று இடம்பெற்ற இ.தொ.கா.வின் தேசிய சபை கூட்டத்திலேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# பங்களாதேஷ், பூட்டான், நேபாள வெளிவிவகார அமைச்சர்களுடன் ஜனாதிபதி கோட்டா சந்திப்பு

(கொழும்பு)

பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக, இந்நாட்டுக்கு வருகை தந்துள்ள பங்களாதேஷ், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைச் சந்தித்தனர்.



கொழும்பில் நடைபெற்ற ஐந்தாவது பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டமை தொடர்பில் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

மிக உயர்ந்த முறையில் மாநாட்டை நடத்துவதற்கு பங்களித்ததற்காக தமது பாராட்டைத் தெரிவித்த அமைச்சர்கள், மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரையையும் பாராட்டினர். கொவிட் தொற்று நோயின் காரணமாக தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கத்தை அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

பூட்டான் வெளிவிவகார அமைச்சர் டெண்டி டோர்ஜி இலங்கையில் மருத்துவக் கல்வி மிகவும் உயர்தரத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டதுடன், இலங்கையில் மருத்துவக் கல்வி கற்க தமது நாட்டு மாணவர்கள் அதிகமானோருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். வெளிநாட்டு மாணவர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் வீசா அனுமதிப் பத்திரம் தொடர்பில் சலுகை வழங்குமாறு அமைச்சர் விடுத்த கோரிக்கை, ஜனாதிபதி அவர்களின் விசேட கவனத்திற்குட்படுத்தப்பட்டது.

பூட்டான் சேதனப் பசளை விவசாயத்தில் நாட்டம் கொண்ட ஒரு நாடாகும். அதன் செயற்திறனை திரு. டோர்ஜி அவர்கள் ஜனாதிபதி அவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

நேபாள வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நாராயண் கட்கா இரு நாடுகளுக்கும் இடையிலான 65 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளை நினைவுகூர்ந்தார். பொதுவான, கலாசார மற்றும் மத பாரம்பரியம் கொண்ட நாடுகளாக இரு நாடுகளுக்கும் இடையே கலாசார பரிமாற்றத்தை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய திரு. நாராயண் தனது நாடு திறக்கப்பட்டிருப்பதனால் பௌத்த மத சுற்றுலா பயணிகளுக்கு தனது நாட்டிற்கு வருகை தரலாம் என்றும் குறிப்பிட்டார். (ம)

# நாட்டு நிலைவரம் தொடர்பில் ரணில் மந்திராலோசனை

## விரைவில் அதிரடி அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டு நிலைவரங்கள் தொடர்பாக, மந்திராலோசனை நடத்தியுள்ளார்.

கட்சியின் முக்கியஸ்தர்களை, கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவுக்கு நேற்று அழைத்துள்ள, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அரசியல் விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து வருகின்றார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் பின்னர், அதிரடியான அறிவிப்பொன்றை விடுவார் என கட்சி வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன. (ம)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## கேள்வி அறிவித்தல் - 2022

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகள், ஆரியகுளம் பகுதியில் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுகளில் ஈடுபடுதல், விளம்பர ஒலிபரப்பு சேவைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் யாழ். மாநகரசபையில் விண்ணப்ப படிவத்தினை பெற்று பூர்த்திசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் விபரம்** குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **21.04.2022** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,000.00

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 01.04.2022 - 20.04.2022

(மு.ப 9.00 - பி.ப. 3.00 மணிவரை அலுவலக நாட்களில்)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 21.04.2022 மு.ப 10.00 மணிவரை

கேள்வி திறத்தல் - 21.04.2022 மு.ப. 10.00 மணிக்கு

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கக் கூடிய பிணைவைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | பழையபூங்கா சிற்றுண்டிச்சாலை | 363,898.26 | 5,000.00 | 1 வருடம் |
| 02 | ஆரிய குளம் பகுதியில் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் | 100,000.00 | 5,000.00 | 1 வருடம் |
| 03 | விளம்பர ஒலிபரப்புச் சேவை (செங்குந்தா மீன் சந்தைக்கு மேல்) | 300,000.00 | 5000.00 | 1 வருடம் |
| 04 | விளம்பர ஒலிபரப்புச் சேவை (நவீன சந்தைக் கட்டிடத்தொகுதி) | 1,000,000.00 | 10,000.00 | 2 வருடம் |
| 05 | பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 2,000,000.00 | 20,000.00 | 2 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல. 0212215978)

**முதல்வர்**
**யாழ். மாநகர சபை**

(C4087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

virtusa

Invicta innovations

SGIC
Samuel Gnanam IT Centre

# Calling all Tech-Whizzes from the North!

## Virtusa is coming to you!

Be prepared for an insightful series of Tech-talks followed by Open Day interviews and On-spot recruitment opportunities.

Venue : Samuel Gnanam IT Centre and Invicta Innovations, Jaffna
Date : April 02-April 03, 2022

Be there this April for an opportunity of a lifetime.

Visit, "HR Department of **Samuel Gnanam IT Centre** in person along with hard copy of your CV and enroll yourself for Tech-talk and recruitment interview".

Address:
72,Palay Road, Thirunelvely,
Jaffna.

Contact:
SGIC HR
Tel-021 221 4209

(10844)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சம் தொட்ட மின் நெருக்கடி

# 15 மணி நேரம் மின் துண்டிக்கப்படும்

## மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமை மற்றும் வரட்சியான காலநிலை என்பன காரணமாக, நாளாந்த மின் தடை 15 மணித்தியாலங்கள் வரை நீடிக்கக்கூடும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

சிலநேரம், எதிர்காலத்தில், மின் துண்டிப்பு நேர அட்டவணைக்குப் பதிலாக, மின் விநியோக நேர அட்டவணையை வெளியிடுவது இலகுவானதாக இருக்கும் என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அந்தச் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தற்போது வரையில், நீர் மின் உற்பத்தியில், சுமார் 1,200 மெகாவோல்ட் மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை இருக்கின்ற போதிலும், நீர் இன்மையால், மதிய நேரத்தில் 300 மெகாவோல்ட் மின்சாரத்தையும், இரவு நேரத்தில் 700 மெகாவோல்ட் மின்சாரத்தையும் மாத்திரமே வழங்க முடியும்.

அதேநேரம், எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களில், 1,700 மெகாட் அளவில் கொள்ளளவு இருக்கின்ற போதிலும், எரிபொருள் இன்மையால், 1,000 மெகாவோல்ட் மின்சாரத்தை மாத்திரமே வழங்க முடியும்.

ஆனால், இரவு நேரத்தில் மாத்திரம் 1,800 மெகாவோல்ட் மின்சாரத்துக்கான கேள்வி உள்ளது.

10 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்படும். மின்சாரம் எதிர்வரும் நாட்களில், 15 மணித்தியாலங்களாகவும் அதிகரிக்க வேண்டி ஏற்படக் கூடும்.

விரைவாக எரிபொருளைப் பெற்றுக்கொடுத்தால், மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தை இயன்றளவு குறைக்க முடியும் என அரசாங்கத்திற்கு அறியப்படுத்தியுள்ளதாக, மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார். (நி-5)

## மின் வெட்டு நீடிப்பால்

# தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயற்படுவதில் இடையூறு

(கொழும்பு)

மின்சாரம் துண்டிக்கப்படும் காலங்களில், தொலைத் தொடர்பு கோபுரங்களை இயங்க வைப்பதற்கு தேவையான டீசலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கோபுரங்களை செயற்படுத்துவதற்காக நேற்று முன்தினம் 3,000 லீற்றர் டீசல் மின் பிறப்பாக்கிகளுக்கு விடுவிக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மின் வெட்டு நீடிப்பதால் தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயற்படுவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான மின்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கு தேவையான எரிபொருளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் விநியோகிப்பதற்கு தமது அமைச்சு தயாராக உள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-5)

# மின் கட்டணம் செலுத்தாத வீடுகளுக்கு மின் துண்டிப்பு

(கொழும்பு)

பல மாதங்களாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கான மின்சாரத்தை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மின் கட்டணத்தை செலுத்தாத வீடுகளின் பட்டியலை சேகரித்து அந்த நபர்களின் மின்சார இணைப்புகளை துண்டிக்கும் பணிகளை இலங்கை மின்சார சபை ஆரம்பித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல வீடுகளில் நேற்று மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

## மீண்டும் விலையை அதிகரிக்கக் கோரும் லிட்ரோ நிறுவனம்

(கொழும்பு)

எரிவாயு விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷாரா ஜயசிங்க தெரிவித்துள்ளார். (நி-5)


## தீர்ந்தது டீசல்

# சாரதிகள், ஓட்டுநர்கள் ஹற்றனில் ஆர்ப்பாட்டம்

(ஹற்றன)

ஹற்றன் நகரில் உள்ள பிரதான வழிகளை மறித்து சாரதிகளும், முச்சக்கரவண்டி ஓட்டுநர்களும், பொதுமக்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், ஹற்றன் நகரம் பகுதியளவில் ஸ்தம்பிதமடைந்தது.

ஹற்றன் நகரிலுள்ள எரிபொருள் நிலையத்தில் டீசலை பெற்றுக்கொள்வதற்கு நேற்று முன்தினம் மாலை முதல் சாரதிகள் காத்திருந்தனர். எனினும், இறுதி நேரத்தில் டீசல் இல்லையென அறிவிக்கப்பட்டது.




இதனால் கடுப்பாகிய சாரதிகள் பொதுமக்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருவதுடன், இந்த அரசு வீடு செல்ல வேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர். (நி-5)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பளை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2021) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(I0842)



(அதிபர், உப அதிபர், கற்பித்த ஆசிரியர்கள், சித்தி பெற்ற மாணவர்களுடன்)

தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்,
யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பளை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பிரச்சினைகளை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் தனிப்பட்ட முறை யில் அறிவிக்க பொதுமக்களுக்கு விசேட தொலைபேசி இலக்கம் வழங்கப்படுவதாக வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். இதன்படி, 077-741 4241 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பிரச்சி னைகளை அறிவிக்குமாறு அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எரிபொருள் பிரச்சினை தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறும், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (நி-5)


## நல்லூர் பிரதேசசபை
## பகிரங்க அறிவித்தல்
## சந்தைக் கழிவு முறைமையை முற்றாக நீக்குதல் தொடர்பானது

நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட திருநெல்வேலி பொதுச்சந்தையில் விவசாய உற்பத்தி பொருட்களுக்கான 10% கழிவு முறைமையினை முற்றாக நீக்கும் பொருட்டு எதிர்வரும் 2022.04.02 ஆம் திகதி முதல் உற்பத்தியாளர்களால் விற்பனைக்காக சந்தைக்குக் கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப் பொருட்கள் கூறல் அடிப்படையில் விலை தீர்மானிக்கப்பட்டு அதற்கான பெறுமதி அனுமதிக்கப்பட்ட சந்தை குத்தகைதாரரின் ஊடாக கொள்வனவு செய்யும் வியாபாரிகளால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். என்பதுடன் குத்தகைதாரருக்குரிய 4% கட்டணம் உற்பத்தியாளர்களால் குத்தகைதாரருக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் உரிய நிறைக்கு கூறப்படும் விலை விகிதங்களுடன் குத்தகைதாரால் பற்றுச்சீட்டு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். இந்த நடைமுறையினை ஏற்று உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் தொடர்புபட்ட பொதுமக்கள் பிரதேசசபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு.ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை**

(C-4096)


# அரச ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிந்தால் மின்சாரத்தை சேமிக்கலாம்

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் மின்சாரத்தை சேமிக்க அரசாங்க ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்றும் முறையை நடை முறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதுமான அளவு நீர் மற்றும் எரிபொருளின் பற்றாக்குறையினால் நாளாந்த மின்வெட்டை குறைப்பதற்கான வழிமுறையொன்றை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க முன்வைத்துள்ளார்.

அடுத்த சில நாட்களில் அரச ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை நடை முறைப் படுத்தினால் தினசரி மின்வெட்டை இன்னும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் குறைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)


## 10 ஆம் ஆண்டு நினைவில் | 12 ஆம் ஆண்டு நினைவில் | 25 ஆம் ஆண்டு நினைவில்

மலர்வு 1946 . 02 . 02 — உதிர்வு 2012 . 02 . 12



**சின்னத்துரை கணபதிப்பிள்ளை**

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை

மலர்வு 1982 . 08 . 30 — உதிர்வு 2010 . 04 . 13



**பிரபாகரன் பிரேமலோஜினி**

மலர்வு 1981 . 05 . 03 — உதிர்வு 1997 . 04 . 08



**கணபதிப்பிள்ளை பிரதீபன்**

பிறப்பு உண்டேல் இறப்பு நியதி என்பது விதி. ஆனாலும் உங்கள் இழப்புக்களை எங்களால் ஏற்க முடியவில்லையே!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(10840)


# இராசிபலன்

31.03.2022
பங்குனி 17, வியாழக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 1.04 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 11.05 மணிவரை
சுபநேரம்- 7.42-9.12 மணிவரை
இராகுகாலம் - 1.42-3.12 மணிவரை
சந்திராஷ்டமம்- ஆயில்யம், மகம்

**வளவன்**

**மேஷம்** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**கடகம்** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** செய்தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும்.

**மகரம்** செய்தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாயப்புண்டு.

**ரிஷபம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகலமுண்டு.

**சிம்மம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு, வேலைச் சுமை கூடும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** பிறருக்கும் உதவும் எண்ணம் உருவாகும், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டால் சுகம் காணும் நாள்.

**கும்பம்** உங்களின் வார்த்தைகளை மற்றவர்கள் பெரிதும் மதிப்பார்கள், செய்தொழிலில் வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** செயற்பாடுகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு

**கன்னி** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணிச் சட்டவிதிகளை மீறினால்

# காணிகள் மீளப்பொறுப்பேற்கப்படும்

## வடமாகாண காணி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள அரச காணிகளை பகிர்ந்து பெற்றுக்கொண்டோர் அரச காணி சட்டவிதிகளுக்கு மாறாக தவறு இழைத்திருந்தால் அரச காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், அரச காணி கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் அக்காணியை அரசினால் மீளப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண காணி ஆணையாளர் அ.சோதிநாதன் அறிவித்துள்ளார்.**

அந்தவகையில் 1. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காணியை அனுமதிப்பத்திரகாரர் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கு முரணாக விற்பனை ஒப்பந்தம், விற்பனைக்கடிதம் மற்றும் நொத்தாரிசு உறுதி போன்றவற்றின் மூலம் கைமாற்றம் செய்தல்.

2. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர காணிகளை குடியிருப்பு மற்றும் விவசாய நோக்கம் தவிர்ந்த வர்த்தக நோக்கத்திற்காகப் பயன்படுத்தல்.

3. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரக் காணிகளை பிரதேச காணி செயலாளரின் அனுமதியின்றி உத்தரவு பெற்ற நில அளவையாளர் மூலம் நில அளவை மேற்கொள்ளல், அரச காணியை அனுமதியின்றி நில அளவை செய்தல்.

4. காணி அபிவிருத்திக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புக் காணிகளுக்கு அளிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறாக பிரதேச செயலாளரின் அனுமதியின்றி நொத்தாரிசு உறுதி மூலம் பிரிவிடல் செய்தல் மற்றும் உரிமை மாற்றம் மேற்கொள்ளல்.

5. குத்தகையில் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய குத்தகைப் பணத்தினை முறையாக செலுத்தாதிருத்தல் மற்றும் முறையான அனுமதியின்றி காணிகளை பிரிவிடல் செய்து உரிமை மாற்றம் என்பவற்றினை நொத்தாரிசு உறுதி மூலம் மாற்றம் செய்தல்.

6. அரச காணிகளை அத்துமீறிப் பிடித்து ஆவணமின்றி குடியிருந்து வருபவர்கள் காணியின் ஒரு பகுதியினையோ அல்லது முழுமையாகவோ வேறு நபர்களுக்கு விற்பனை செய்தல்.

7. பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றாதிருத்தல்,

(பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகள் உரியவாறு அபிவிருத்தி செய்து உணவு உற்பத்தி உறுதி செய்யப்படாது இருப்பின், அனுமதிப் பத்திர நிபந்தனை மீறலை கருத்திற்கொண்டு அக்காணிகளின் ஆவணங்கள் விரைவாக இரத்துச் செய்யப்பட்டு பிரதேசத்தில் காணியற்ற விவசாயத்தில் ஆர்வம் உடையவர்களிற்குப் பகிர்ந்தளிக்கப்படும்.)

அரச ஒதுக்கீட்டிற்குரிய காணிகளை அத்துமீறி கைப்பற்றுதல் ஆகிய தவறுகள் இழைக்கப்பட்டிருந்தால் அவை அரசினால் மீளப்பொறுப்பேற்கப்படும் என மேலும் தெரிவித்தார். (4-5)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு பெண்கள் உட்பட ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற பிடிவிறாந்தை நடைமுறைப்படுத்த சென்ற இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றத்தில் 2 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்லாததால் நீதிமன்றினால் அவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்தினை நடைமுறைப்படுத்தி அவர்களை கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யோகபுரம் பகுதிக்கு சென்றனர். அதன்போது அங்கு நின்றவர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், பொலிஸார் மீது தாக்குதலையும் மேற்கொண்டனர். சம்பவம் தொடர்பில் மேலதிக நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரு பெண்கள் உள்ளிட்ட ஐவரை கைது செய்தனர். (4-5-33)

# ஆவரங்கால் பகுதியில் பிக்கப்-மோ.சைக்கிள் விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பிக்கப் ரக வாகனம் மோட்டார் சைக்கிள்களை எதிரே உள்ள பாலத்தினுள் மோதித் தள்ளியது. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீது மோதியதில் ஒரு மோட்டார் சைக்கிள் பிக்கப் வாகனத்துடன் சேர்ந்து பாலத்தினுள் வீழ்ந்தது. குறித்த சம்பவத்தில் பிக்கப் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் இரண்டும் சேதமடைந்தன. இதிலே மோட்டார் சைக்கிளுடன் நின்ற இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-33-60)

# கைதடி பாலத்தடியில் விபத்து ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பாலத்தடிப் பகுதியில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த வர்த்தகர் மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பாலத்துடன் மோதியமையால் தலையில் படுகாயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் மத்தி பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை ஈஸ்வரன் (வயது 59) என்ற வர்த்தகரே இவ்வாறு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (4-5-30)



தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா முன்பள்ளி மாணவர்களது சிறுவர் சந்தை நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்- கஜிந்தன்)

# பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்வி பிரிவினால் நடத்தப்படும் 2022 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நெறிகளான ஆடை வடிவமைத்தலும் தயாரித்தலும் - யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் அழகுக்கலை - யா/இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ளது.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும் ஆர்வமுள்ளவர்களும் இப்பயிற்சி நெறிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

மேற்படி பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 077 714 7036 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

# புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஈ.ரி.எப். அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

2021 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 9 ஆயிரம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.

எனவே இதனை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை www.etfb.lk எனும் இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும். அல்லது யாழ்.மாவட்டத்தில் இல.861/2 நாவலர் வீதி யாழ்ப்பாணம் (021 222 00 10), வவுனியா மாவட்டத்தில் 69/1 மில் வீதி வவுனியா (024 222 8225) ஆகிய பிராந்திய அலுவலகங்களிலும் பெற்று எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் புலமைப் பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை, மெஹெவரபியச, 19 ஆம் மாடி நாரஹேன்பிட்டி கொழும்பு-03 (த.பெ.இல. 809) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய், சிறுநீரக, இதய நோயாளர்களுக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு - அரச மருந்தாளர் சங்கம்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியிலுள்ள பல மருத்துவமனைகளில் இதயம், சிறுநீரகம் மற்றும் புற்று நோயாளர்களுக்காகப் பயன்படுத்தப்படும் அதிகளவான மருந்து களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அதிகளவான மருந்துகள் தீர்ந்துவிடும் எனவும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு

## பொதுப் போக்குவரத்து சேவைக்கும் பாரிய இடையூறு

(கொழும்பு)
எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுப் போக்குவரத்து சேவைக்கும் பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக 25 வீதமான தனியார் பேருந்துகள் மாத்திரமே போக்குவரத்தில் ஈடுபடுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார். (நி-5)

# எரிபொருள் பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் எரிபொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 30 தொடக்கம் 35 சதவீதம் அதிகரித்துள்ளது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

2021 ஜனவரிக்குள் 139,000 மெற்றிக்தொன் எரிபொருள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் 2022 ஜனவரியில் எரிபொருளின் பயன்பாடு 198,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

வழக்கத்திற்கு மாறான பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுமித் விஜேசிங்க, அவ்வாறு அதிகரிப்பதற்கான காரணத்தை ஆராய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையினையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# மக்கள் வரிசையில் நிற்பது வருத்தமளிக்கிறது

## கோட்டாவின் சகோதரன் சமல்

(கொழும்பு)
"நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சஷவோ அல்லது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ அல்லது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவோ பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்."

இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு நான் வருத்தமடைகின்றேன். தற்போதைய நெருக்கடியான சூழ் நிலையில் அரசிலுள்ள எவரும் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்.

அரசிடம் நிதியைக் கடுமையாகக் கையளிப்பதை எண்ணெய் மற்றும் எரிவாயு வரிசையில் நிற்கும் மக்கள் நன்கு அறிந்திருந்த போதிலும் அதற்கு அரசு வழங்கும் பதில்கள் போதுமானதாக இல்லை. எனவே, அரசிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்" -என் அவர் தெரிவித்தார். (நி-5)



முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 22 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் "ஹரித தெயக்" தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை திட்டம் மன்னார் மாவட்டத்திலும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்: ஜோசப்நயன்).


ŪKI

Full-stack Web Development

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா? அல்லது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

காலம் : 6 மாதங்கள்

தகமை : கா. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருத்தல்

மொழிமூலம் : தமிழ்

Uki - கிளிநொச்சி



விண்ணப்ப முடிவு திகதி :
08 சித்திரை 2022

மேலதிக தகவல்களுக்கு
www.uki.life info@uki.life 021 228 4647

(C-4095)



பாராட்டி வாழ்த்துகின்றோம்








கு.தஸ்மிரா - 160 புள்ளி

பு.கர்சன் - 155 புள்ளி

2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற அ.கிருஷாயினி (136), சு.தர்னிகா(101) ஆகிய மாணவர்களையும் வழி நடத்திய ஆசிரியர் திருமதி. மங்களராசேஸ்வரி கருணானந்தன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(10886)

பாடசாலைச் சமூகம்: யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை


# தொடரூந்துக் கட்டணங்கள் 58 சதவீதத்தால் அதிகரிப்பு



(கொழும்பு)
நாட்டில் தொடரூந்து கட்டண திருத்தத்தின் போது கட்டணங்கள் 58 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதல் 10 கிலோமீற்றருக்கு, கிலோ மீற்றருக்கு ஒரு ரூபாய் 30 சதமாக இருந்த மூன்றாம் வகுப்பு தொடருந்து கட்டணம் இரண்டு ரூபாவாக அதிகரிக்கப்படும் எனவும் அதற்கமைய 10 கிலோமீற்றருக்கான டிக்கெட்டின் விலை இருபது ரூபாவாக உயரும் எனவும் தெரிவித்துள்ளார்.


அத்துடன் அண்மைக் காலமாக நான்கு தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் தொடரூந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 08

# நேர்மை



ஒரு குடும்பத்தில் தந்தை இறந்து போனார். வயதுக்கு வந்த மகன் குடும்பப் பொறுப்பு ஏற்றான். அப்பா இறந்த பிறகு அவரது டயரியில் இருந்த குறிப்பு ஒன்று சற்றே அதிர்ச்சி தந்தது.

அதில் நண்பரிடம் ஒரு லட்சம் கடனாக வாங்கியிருப்பதைத் தந்தை குறிப்பிட்டிருந்தார். அவர் கடன் வாங்கிய விபரம் குடும்பத்தில் யாருக்கும் தெரியவில்லை.

இறப்பின் போதும்,இறப்பிற்குப் பிறகும் கடன் கொடுத்த அந்த அப்பாவின் நண்பரை வேறு வேறு இடங்களில் சந்தித்து விட்டான். அவரும் இவனிடம் நலம் விசாரித்ததோடு சரி.

அவனது அப்பாவிடம் வழங்கியிருந்த கடன் குறித்து பேசாதது ஆச்சரியம் தந்தது. எனவே தந்தையின் நண்பரைத் தேடிச்சென்றான், சந்தித்தான், விவரம் சொன்னான்.

அவர் மெதுவாகச் சொன்னார்,உங்க அப்பா எனக்குப் பல நேரங்களில் உதவியிருக்கிறார். அவர் ஒரு சமயத்துல உங்க அம்மா உடல் நலம் பாதிக்கப்பட்டபோது கேட்டார். கொடுத்தேன்.

அதுக்கு எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. திடீர்னு உங்கப்பா.இறந்துட்டார்.

இந்த நிலையில் எந்த ஆதாரமும் இல்லாம, உங்கப்பா எங்கிட்ட கடன் வாங்கியிருக்காருன்னு கேட்குற மனம் எனக்கு வரல.

அதுக்கு முக்கிய காரணம், கடன் வாங்கும்போதே இது வீட்டிற்குத் தெரிய வேண்டாம்ன்னு சொன்னார்.

அவர் இறந்த பிறகும் அவர் வார்த்தைக்கு மதிப்பளிப்பதுதான் நியாயம்ன்னு பட்டது. அதனால நானும் அதை விட்டுட்டேன்" என்றார்.

எங்கப்பா கையெழுத்துப் போட்டு கடன் வாங்கலேனாலும் அதைத் திரும்பக் கொடுக்குறது தான் அவரோட மகனுக்கு அடையாளமாக இருக்கும் என்ற மகன், கையோடு கொண்டு சென்றிருந்த பணத்தைத் திரும்பக் கொடுத்தான் நண்பர் நெகிழ்ந்தார்.

பண்பும் செயலும்தான் ஒருவனை உயர்த்தும். மதமோ, சாதியோ,வசதியோ அல்ல.

இந்தச் சம்பவத்தில் இரண்டு நல்லவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். இதுதான் வழக்கு மொழியில் சொல்வார்கள்,

நல்லவர்களுக்கு எழுத்து தேவையில்லை; கெட்டவர்களுக்கு எழுதியும் பயனில்லை என்று.

ஒருவன் நல்லவனாகவும் கெட்டவனாகவும் உருவாகச் சூழ்நிலைதான் பெரும்பங்கு வகிக்கிறது.

தப்புச் செய்யச் சூழல் அமையாதவரை எந்த மனிதனும் நல்லவன்தான் என ஒரு வாக்கியம் உண்டு.

சேற்றிலும் செந்தாமரையாக வளர்வதே முக்கியம்.

தப்புச் செய்ய வாய்ப்புக் கிடைத்தும் வாய்மையோடும், சூழல் அமைந்தும் நேர்மையோடும் வாழ முயல்பவனே நல்லவன்."

மனிதகுலத்தில் நல்லவர்கள் என்ற இனம் அழிந்து வரும் இனமாக அடையாளம் காட்டப்படுவது வேதனையளிக்கிறது.

# கொவிட் முடக்கத்ததால் 40கோடி மாணவர்கள் பாதிப்பு

## யுனிசெப் தகவல்

(வோஷிங்டன்)

2019 ஆம் ஆண்டு சீனாவில் கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸால் சர்வதேச அளவில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது.

இதுவரை 485,618,602 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 6,157,237 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்நிலையில், கொவிட் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சீனாவில் மீண்டும் கொவிட் வேகம் எடுத்துள்ளது.

கொவிட் தொற்றின் காரணமாக பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 23 நாடுகளில் 40 கோடியே 50 இலட்சம் மாணவர்கள் கொவிட் தொற்று காரணமாக பாடசாலைகள் பகுதியளவு அல்லது முழுமையாக மூடப்பட்டுள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் தெரிவிக்கிறது.

'14 கோடியே 70 இலட்சம் பிள்ளைகள் தாங்கள் பாடசாலைக்கு சென்று கல்வி கற்கும் முறையை தவறவிட்டுள்ளதாக யுனிசெப் மதிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸின் மிகக் கடுமையான உடல் நலப் பாதிப்புகளுக்கு குழந்தைகள் குறைவாகவே பாதிக்கப்படுகின்றனர் என்றாலும், தொற்று நோயினால் பாடசாலைகள் மூடப்படுவதனால் அவர்களின் வாழ்க்கை தலைகீழாக மாறியுள்ளது என யுனிசெப் தெரிவித்துள்ளது. (நி-5)

# ரஷ்யா- உக்ரைன் பேச்சுவார்த்தைய முக்கிய நகரங்களில் தாக்குதலை குறை

(மொஸ்கோ)

உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் செரினிஹிவ் நகரங்களைச் சூழவுள்ள பகுதிகளில் இராணுவ நடவடிக்கையை முற்றிலும் குறைப்போம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

துருக்கி - இஸ்தான்புல்லில் உக்ரைன் - ரஷ்யா இடையே நேற்று முன்தினம் பேச்சுவார்த்தையில் ரஷ்யா சார்பாக பேச்சுவார்த்தையில் பங்கேற்ற அந்நாட்டு துணை பாதுகாப்பு அமைச்சர் அலெக்ஸாண்டர் போமின் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பரஸ்பர நம்பிக்கையை அதிகரிக்கவும் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கான சூழலை ஏற்படுத்த வும் இந்த முடிவு எடுக்கப்பட்டு ள்ளதாக அவர் கூறினார்.

கீவ் மற்றும் செரினிஹிவ் நகரங்களில் இராணுவ நடவடிக்கைகள் குறைக்கப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ளதற்கேற்ப, அந்த நகரைச் சுற்றியுள்ள பகு

# இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பிரமாண்ட பேரணி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இம்ரான் கான் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் பிரமாண்ட பேரணியை நடத்தின.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கான் அரசு மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளன. இந்த தீர்மானத்தின் மீது இன்று வியாழக்கிழமை விவாதம் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து 3 ஆம் திகதி பாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரஷ்யா வலியுறுத்தும் அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க உக்ரைன் நிபந்தனை விதிப்பு

**(கீவ்)**

**மேற்கத்தேய நாடுகள் தங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளித்தால், நேட்டோவில் இணையாமல் ரஷ்யா வலியுறுத்தும் அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க சம்மதம் தெரிவிப்பதாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இஸ்தான்புல் பேச்சு வார்த்தையின் போது உக்ரைன் தெரிவித்துள்ளது.**

ரஷ்ய தலைநகர் இஸ்தான் ம்லில் நேற்று முன்தினம் டம்பெற்ற பேச்சுவார்த்தை ன் போது உக்ரைன் பேச்சு ார்த்தைக் குழு உறுப்பினர் டவிட் அரகாமியா இதனைத் தரிவித்தார்.

நேட்டோவின் 5 ஆவது ட விதியின் படி, அந்த அமை ில் உறுப்பினராக இருக்கும் ட்டின் மீது யாராவது படை படுத்தால் தான் அது மற்ற றுப்பு நாடுகளின் மீதான க்குதலுக்கு இணையாகும். ப்போதுதான் நேட்டோ மைப்பு எதிர்வினையாற் ம்.

இந்த நிலையில், நேட் டாவில் இணையாமலேயே த்தகைய பாதுகாப்பு உத்தர ாதத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, பிரிட் டன், பிரான்ஸ், சீனா என்பன வழங்க வேண்டும்.



அத்துடன், ஜேர்மனி, கனடா, இஸ்ரேல், இத்தாலி, போலந்து, துருக்கி ஆகிய நாடுகளும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று உக்ரைன் கோரி வருகிறது.

அவ்வாறு உத்தரவாதம் கிடைத்தால்தான் ரஷ்யா வலியுறுத்தி வரும் அணிசேரா நிலைப்பாட்டை ஏற்க முடியும் என்று அந்த நாடு தெரிவித்துள்ளது. அணிசேரா நிலைப்பாட்டை எடுத்தால், நேட்டோவில் இணையும் விருப்பத்தை உக் ரைன் நிரந்தரமாகக் கைவிட வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## ...தயில் முன்னேற்றம் ...றைக்க ரஷ்யா உறுதி

திகளிலிருந்து ரஷ்யப் படையினரில் சிலரை திரும்பப் பெறுவதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா சொல்வதற்கும் அதன் செயல்களுக்கும் இடையே வித்தியாசம் இருப்பதாக, அமெரிக்க வெளியுறவு செயலாளர் அண்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் அச்சுறுத்தல் குறையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

ளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இம்ரான் கான் தலைமையிலான ஆளும் கட்சி தனது பலத்தை நிரூபிக்கும் வகையில் கடந்த 27 ஆம் திகதி தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரமாண்ட பேரணியை நடத்தியது. பேர ணியில் பேசிய இம்ரான்கான் எதிர்க்கட்சிகளை கடுமையாக விமர்சனம் செய்தார்.

இவ்வாறான நிலையி லேயே தங்களுக்குள்ள ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகள் இஸ்லாமாபாத்தில் பிர மாண்ட பேரணியை நடத் தின.

இந்தப் பேரணியில் பல்வேறு எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு இம்ரான் கான் மற்றும் அவரது அரசை கடுமையாக விமர்சித்தனர். (நி-5)

## இந்தியாவும் சீனாவும் கூட்டாளிகள்

### சீன வெளியுறவுத்துறை அமைச்சர்



(டில்லி)

இந்தியாவும் - சீனாவும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ள வேண்டும் பல வீனப்படுத்திக் கொள்ளக் கூடாது என சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங்யி தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்த வாங்யி தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து சீன அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்திக் குறிப்பில், "சீனாவும், இந்தியாவும் ஒன்றுக்கொன்று அச்சுறுத்தலாக இல்லை. இருநாடுகளுக்கு இடையே நிலவும் மாறுபாடுகளை சரியான முறையில் கையாள வேண்டும். முதிர்ந்த அறிவார்ந்த அண்டை நாடுகளாக இருதரப்பு உறவுகளில் எல்லைப் பிரச்சினையை பொருத்தமான இடத்தில் வைத்து இந்தியாவும், சீனாவும் கையாள வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## ரஷ்யாவின் ஏவுகணை வீச்சில் 12 பேர் பலி, 20 பேர் காயம்



(கீவ்)

உக்ரைன்மைக்கோலைவ் நகரில் உள்ள அரச கட்டடம் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் 12 பேர் உயிரிழந்த நிலையில், 20 பேர் காயம் அடைந்துள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் தாக்குதல் ஒரு மாதத்துக்கு மேல் நீடித்து கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் ஏவுகணை, வான்வழி தாக்குதலில் ஆயிரக்கணக்கான உக்ரைன் மக்கள் பலியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நேட்டோ உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு உக்ரைனுக்கு அழைப்பு

(பிரஸ்செல்ஸ்)

பிரஸ்செல்ஸில் நடைபெறவுள்ள நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நேட்டோ பொதுச் செயலாளர், தலைமையில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா, பின்லாந்து, ஜோர்ஜியா, ஜப்பான், நியூசிலாந்து, சுவீடன், கொரியா குடியரசு ஆகிய நாடுகளும் பங்கேற்குமாறு அழைக்கப்பட்டுள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதில் இருந்து 30 நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களால் கூட்டம் கூட்டப்படுவது இது 2 ஆவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சுப்பர் மார்க்கெட் மீது விழுந்து நொருங்கிய விமானம்




(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் சிறிய ரக விமானம் ஒன்று சுப்பர் மார்க்கெட் ஒன்றின் மீது விழுந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதோடு 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மெக்சிக்கோவின் அகாபுல்கோ நகரில் இருந்து விமான ஓட்டி உட்பட 4 பேருடன் புறப்பட்ட அந்த விமானம், பியூப்லா நகரை நோக்கி சென்றுகொண்டிருந்த போது மத்திய மெக்சிக்கோவின் டெமிக்ஸ்கோ பகுதியில் விழுந்து நொறுங்கியுள்ளது.

இந்த விபத்தில் சுப்பர் மார்க்கெட்டில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த 4 பேர்படுகாயம்அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக ஒன்றுசேருங்கள்

## மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

(நெளுக்குளம்)

**கோட்டா, மகிந்தவின் மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக மக்கள் கவனயீர்ப்பு ஒன்றை நடத்துவதற்கு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.**

கோட்டா - மகிந்தவின் மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக ஒன்றுசேருமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வன்னி மாவட்ட செயலாளர் என்.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை பற்றி அனைத்து மக்களும் அறிந்தவைகளே. ஏனெனில் அனைத்து மக்களும் ஏதோ ஒரு வகையில் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக வரிசையிலோ அல்லது பொருட்கள் கிடைக்காமையினால் அவதிப்படக்கூடிய சூழலினை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

பொதுஜன பெரமுன ஆட்சி அமைப்பதற்கு முன்பு அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் கோட்டா, மகிந்த ஆட்சிக்கு வந்தால் 1500/- ரூபாய் யூரியா மானியமாகத் தரப்படும் எனவும் பத்து இலட்சம் அரச நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அபிவிருத்தியில் நாடு கொடி கட்டிப் பறக்கும் என்றும் கூறினார்கள்.

இன்று இலங்கையில் உழைக்கும் எண்பது வீதமான மக்கள் பட்டினிச்சாவுக்குள் செல்லக்கூடிய அவல நிலைக்குள் கொண்டு வந்து நிறுத்திய ஆட்சியாளர்களாக இவர்கள் இருந்து வருகிறார்கள் என மேலும் தெரிவித்தார். (4-5-299)



முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் பிரதேச செயலகம் மற்றும் மல்லாவி பொலிஸ் நிலையம் என்பன இணைந்து நேற்று மல்லாவி நகரப்பகுதியில் டெங்கு ஒழிப்புகள வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன. (படம்:-யதுபாஸ்கரன்)

## 'எழில்', 'சுகந்தி' திரையிடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விருதுகள் பெற்ற விமல்ராஜின் குறுந்திரைப் படங்களான "எழில் மற்றும் "சுகந்தி" ஆகியன எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் மீண்டும் திரையிடப்படவுள்ளன.

பொதுமக்கள் தமது முழு ஆதரவை தந்துதவுமாறு படக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.




மேலும் டிக்கெட்டுக்கள் முற்பதிவிற்கு 076 467 3945, 076 022 0001 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

## சாவகச்சேரி நகர அழகுபடுத்தல் திட்ட திறப்பு விழா

(சாவகச்சேரி)

நூறு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தெரிவான சாவகச்சேரி நகர அழகுபடுத்தல் திட்ட திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன் தலைமையில் காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாகல கொடஹேவாவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (4-5-30)

## தனுஷ்கோடி முதல் தலைமன்னார் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி

### நீந்தி சிறுவன் சாதனை



(மன்னார்)

இந்தியா தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 14 வயது டைய சினேகன் எனும் சிறுவன் தனுஷ்கோடி முதல் இலங்கையின் தலை மன்னார் வரையில் நீந்தி பின் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனை வரையிலான பாக்ஜலசந்தி கடல் பகுதியை 19.45 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த 1974 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த வி.எஸ். குமார் ஆனந்த் முதல் முறையாக் தலைமன் னார் முதல் தனுஷ்கோடி மீண்டும் தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரை 51 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

அவரை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த ரேஷன் அபே சுந்தர தலைமன்னார் முதல் தனுஷ்கோடி பின்னர் தலைமன்னார் வரை 28 மணி நேரம் 19 நிமிடத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பூச்சி மருந்துகள் பறிமுதல்

(சென்னை)

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கை க்கு கடத்த முயன்ற ரூ. 5 இலட்சம் மதிப்பிலான களைக் கொல்லி பூச்சி மருந்து தமிழக கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர். குறித்த சுற்றி வளைப்பில் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்திய சரக்கு வாகனம் மற்றும் வள்ளம் ஆகியவற்றையும் பறிமுதல் செய்ததுடன் இது குறித்து வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடியவர்களை வலை வீசி தேடி வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (4-5-100)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 350 |
| தக்காளி | 80 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 80 | 80 |
| கோவா | 80 | 70 | 120 | 100 |
| கரட் | 140 | 200 | 200 | 240 |
| பூசணி | 50 | 80 | 80 | 80 |
| புடோல் | 150 | 100 | 150 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 160 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 150 | 220 |
| கருணைக் கிழங்கு | 80 | 140 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 140 | 120 | 160 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 150 | 150 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 1400 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 160 | 180 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 180 | -- | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | - | -- | -- | -- |

## வடக்கில் ஐந்து வருடங்களில் 50 யானைகள் உயிரிழப்பு

(குருமன்காடு)

கடந்த 5 வருடங்களில் வடமாகாணத்தில் 50 இற்கு மேற்பட்ட யானைகள் இறந்துள்ளன என வடமாகாண வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவ அதிகாரி பா.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 6 வயது யானை ஒன்று இறந்தமை தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காடு அழிப்பு, மரம் வெட்டுதல், கருங்கல் அகழ்தல், கிரவல் அகழ்தல், மணல் அகழ்தல் என்பன காரணமாக காடுகள் அழிவடைந்து வருகின்றன. இதன் காரணமாக காட்டு விலங்குகள் வெளியில் வருகின்றன.

வடமாகாணத்தில் 5 வருடத்தில் 50 இற்கு மேற்பட்ட யானைகள் வெங்காய வெடி காரணமாக இறந்துள்ளன. வெங்காய வெடி காரணமாக பாதிக்கப்பட்ட யானைகளுக்கு தேவையான மருந்துகள் வழங்கியுள்ளோம். மனிதர்கள் சிலர் வேட்டைக்காக வைக்கும் வெங்காய வெடி காரணமாகவே பல யானைகள் இறந்துள்ளன எனத் தெரிவித்தார். (4-5-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

# நான்கில் வருகிறது ராகு; உடல் நலத்தில் கவனம் தேவை

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**(உத்தராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: போ, ஜ, ஜி, ஜீ, ஜே, ஜோ, க, கா, கி உள்ளவர்களுக்கும்**

**மகர இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் 4 ஆம் இடமான சுக ஸ்தானத்திற்கு வரப்போகிறார். எனவே ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை அமையும். அதேநேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு வரப்போகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகு-கேது இருவரும் இந்த இடங்களில் சஞ்சரித்து, அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கேற்ப பலன்களை உங்களுக்கு வழங்கப் போகிறார்கள்.

**சுக ஸ்தானத்தில் ராகு, தொழில் ஸ்தானத்தில் கேது**

இந்த ராகு-கேது பெயர்ச்சியில், உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்திற்கு வருகிறார் ராகு. இது சுக ஸ்தானமாகும். 'அர்த்தாஷ்டம ராகு'வாக வருவதால், சுக ஸ்தானத்தில் பிரச்சினைகள் ஏற்படும். ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி தலைதூக்கும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் பங்குதாரர்கள் விலக நேரிடலாம். புதிய பங்குதாரர்களை ஆராய்ந்து சேர்த்துக் கொள்வது நல்லது. பொது வாழ்வில் பொறுப்புகள் திடீரென மாறப்படலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனம் தேவை. அளவுக்கு அதிகமான விரயங்கள் ஏற்படலாம். இழப்புகள் அதிகம் ஏற்படும். எதையும் நிதானித்துச் செய்ய இயலாது. உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் இனிமை தருவதாக அமையாது. பகைவர்களின் ஆதிக்கம் மேலோங்கி பல பணிகளைச் செய்ய இயலாமல் போகலாம். இக்காலத்தில் சர்ப்ப ப்ரீதிகளைச் செய்து கொள்வது நல்லது.

**சுக்கிரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, ஓரளவு நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். தொழிலில் ஏற்பட்ட குறுக்கீடுகள் அகலும். குடும்ப ஒற்றுமை திருப்தி தரும். பிள்ளைகளின் திருமணம் போன்ற காரியங்கள் நடைபெற வழிபிறக்கும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தகராறுகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அசையாச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு. நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நல்ல காரியங்கள் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர்.

**கேதுவின் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது, தொழில் முன்னேற்றம் உண்டு. படித்து முடித்து வேலை கிடைக்காத பிள்ளைகளுக்கு இப்பொழுது வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். தொழிலை விரிவுபடுத்த, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நீங்கள் உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தால் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் இப்பொழுது கிடைக்கலாம். குடும்ப முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவெடுப்பீர்கள். தனவரவு திருப்திகரமாக இருக்கும். வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, செலவிற்கேற்ற வரவு வந்து சேரும். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். பாகப்பிரிவினை சுமுகமாக நடைபெறும். எடுத்த முயற்சி பலன் தரும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அண்ணன், தம்பிகளின் அன்பும், அரவணைப்பும் கூடும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். சலுகைகளும் எதிர்பார்த்தபடி கிடைக்கலாம். முன்னோர் செய்த தர்ம காரியங்களை முறையாகச் செய்ய முன்வருவீர்கள்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)**




சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, இடவிற்பனையால் தன இலாபம் கிடைக்கும். இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். உடன் பணிபுரிபவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். அரசு வழியில் வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். பயணங்கள் பலன் தரும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைக்கலாம். நிச்சயிக்கப்பட்ட ஒரு சில காரியங்கள் நல்லவிதமாக நடந்தேறும்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். 'வியாபாரத்தில் முதலீடு செய்ய பணம் வேண்டுமே' என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்பொழுது பணம் கைக்கு கிடைக்கும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். பிரிந்த சொந்தங்கள் மீண்டும் வந்திணையும். பாதியில் நின்ற கட்டுமானப் பணி மீதியும் தொடரும். ஆரோக்கியம் சீராகும். வெளிநாட்டில் வசிக்கும் சொந்தங்களால் ஆதாயம் உண்டு. நாகரிகப் பொருட்களை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வர்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். அதன்படி வருகிற ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு செல்லும் குரு, அங்கிருந்து உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களை பார்க்கிறார். இதனால் கல்யாண வாய்ப்பு கைகூடும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தந்தை வழி ஆதரவு உண்டு. அடுத்ததாக 22.4.2023 அன்று மேஷத்தில் குரு பகவான் சஞ்சரிப்பார். அப்போது குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் அப்போது நடைபெறும். எனவே குடும்பத்தில் மாங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். மதிப்பும், மரியாதையும் உயரும். மற்றவர்களை நம்பி செய்த காரியங்கள் நல்லவிதமாக முடியும். உத்தியோகத்தில் இதுவரை வராத பதவி உயர்வு இப்பொழுது வந்து சேரும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில், முக்கிய புள்ளிகளின் ஆதரவு கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவைப்படும். அர்த்தாஷ்டம ராகு என்பதால் எதையும் சிந்தித்துச் செய்வது உத்தமம். கணவன் - மனைவிக்குள் பிணக்கு ஏற்படாமல் இருக்க, ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படுங்கள். பிள்ளைகளால் பிரச்சினைகள் வரலாம்.

அவர்களை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இல்லத்து பூஜையறையில் சனி கவசம் பாடி வழி படுவதுடன் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதும் நல்லது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இயல்பு மாறுமா!



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீது ஏறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! இந்தப் பயங்கர நடு நிசியில் நீ இப்படி விடாப்பிடியாக ஒரு செயலில் இறங்கி இருப்பது எதற்கோ? உனக்காகவா அல்லது பிறருக்காகவா? சில சமயங்களில் பிறருக்காகச் செய்யப்படும் செயல் அவர்களால் மதிக்கப் படாமல் கூடப் போவதும் உண்டு. இதனை விளக்க வில்வநாதன் என்பவனின் கதையைக் கூறுகிறேன் கவனமாகக் கேள்" என்று கூறிக் கதையை ஆரம்பித்தது.

விசாலூர் என்ற கிராமத்தில் வில்வநாதன் என்ற பணக்கார விவசாயி இருந்தான். அவன் எப்போதும் தன்னைச் சுற்றிப் பத்து பேர்களை உட்கார வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஏதாவது அறிவுரைகளைக் கூறிக் கொண்டே இருப்பான். ஆனால் யாருக்கும் எந்த உதவியும் செய்து விடமாட்டான்.

அவன் அடிக்கடி "பிறருக்குத் தீங்கு செய்வது எவ்வளவு தப்போ அவ்வளவு பிறருக்கு உதவுவதும் தப்பு. ஒருவன் தான் வாழத் தன் காலிலேயேதான் நிற்க வேண்டும். பிறரை எதிர்பார்க்கக் கூடாது. அப்போது தான் உலகம் உருப்படும்" எனக் கூறி வந்தான்.

இதைக் கேட்டு வந்த அவ்வூராரும் பிறருக்கு உதவுவது என்பதை நாளடைவில் மறந்தே போனார்கள்.


ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு மகான் வந்தார். அவர் "மனிதன் பிறருக்காக வாழ வேண்டும். அதில் தான் அவனுக்கு இகலோகத்தில் உயர்வும் சுகமும் கிடைக்கும். பரலோகத்தில் மோட்சம் கிட்டும்" என்று எல்லோர் மனதிலும் நன்கு பதிய வைத்துவிட்டுச் சென்றார். அவர் கூறியபடி அந்த ஊரார் பிறருக்கு உதவத் தொடங்கினார்கள்.

அந்த ஊரில் வீராசாமி என்ற இளைஞன் இருந்தான். சிறுவனாக இருந்த போது அவன் வீடு இடிந்து விழுந்ததால் அவனது தாய், தந்தையர் இறந்து போனார்கள். அவனது காலில் பலத்த அடிபட்டு எந்த வேலையும் செய்ய முடியாமல் போயிற்று. அவன் பிச்சை எடுத்து கிடைத்ததைச் சாப்பிட்டு மிகவும் கஷ்டப்பட்டு நாட்களைக் கழித்து வந்தான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்



அங்கேயே நிரந்தரமாய்த் தங்குவது என்று இராம, இலக்குவனர் முடிவு செய்தனர். அவர்கள் தங்கி இருக்கப் பர்ணசாலை ஒன்று இலக்குவன் வகுத்துக் கொடுத்தான்.

மூங்கில் துண்டுகளைக் கால்களாக நிறுத்தினான்; அவற்றின் மீது நீண்ட துலத்தை வைத்து, வரிச் சில்களை ஏற்றிக் கட்டினான்; ஓலைகளைக் கொண்டு அவற்றை மூடினான்; தேக்கு இலையால் கூரையைச் சமைத்தான்; நாணல் புல்லை அதன் மீது பரப்பினான்; சுற்றிலும் மூங்கிலால் சுவரை வைத்து, மண் ணைப் பிசைந்து நீரைத் தெளித்து ஒழுங்கு படுத்தினான்.

கல்லும் முள்ளும் அடங்கிய காட்டில் சீதையின் மெல்லிய அடிகள் நடந்து பழகின. "இன்னல் வரும் போது எதையும் தாங்கும் ஆற்றல் உண்டாகிறது" என்று இராமன் கூறினான்; தம்பியின் கைகள் இப்பர்ணசாலையை அமைத்துத் தந்ததைக் கண்டு வியந்தான்; அவன் செயற்றிறனைப் பாராட்டினான். இராமன் தம்பியை நோக்கி, "உலகில் பொருட் செல்வத்துக்கு அழிவு உண்டு; அறத்தின் அடிப்படையில் விளையக் கூடிய இன்பத்திற்கு நிகர் எதுவும் இல்லை; ஆட்சி நிலைப்பது அன்று; தவம்தான் நிலையானது" என்று தத்துவம் போதித்தான்; தவ வாழ்க்கையில் அவர்கள் ஈடுபட்டனர்.

### பரதன் வருகை

வசிட்டர் அனுப்பிய தூதர் பரதனிடம் ஓலை தந்தார். "தசரதன் அழைக்கின்றான்" என்று மட்டும் அதில் எழுதியிருந்தது.

முடங்கல் கண்டதும் தடங்கல் இன்றிப் புறப்பட்டான் பரதன், இராமனைக் காணும் ஆர்வம் அவனை உந்தியது; இளையவன் சத்துருக்கனனும் உடன் புறப்பட்டான்.

பரதன் பயணம் ஏழு நாள் தொடர்ந்தது; எட்டாம் நாள் கோசல நாட்டை அடைந்தான்; அயோத்தியை அடைந்தான். ஆனால், அந் நாட்டை அவனால் காண முடியவில்லை.

'கொடிச் சீலைகள் ஆடி அசைந்து அவனை வரவேற்கும்' என்று எதிர் பார்த்தான்; அவை அரைக் கம்பத்தில் தொங்கி உயிருக்கு ஊசல் ஆடிக் கொண்டிருந்தன; "வண்ண மலர்கள் கண்ணைப் பறிக்கும்" என்று எதிர் பார்த்தான்; இவை வாடி வதங்கிச் சோக கீதம் பாடிக் கொண்டிருந்தன; வயல்கள் உழுவார் அற்று ஊடல் கொண்ட பத்தினிப் பெண்டிராய் விளங்கின.

பல நிறச் சேலை அணியும் உழத்தியர், நிலத்தில் புகுந்து களை பறிக்கக் கால் வைக்கவில்லை; உழவர்களின் ஏர்கள் துறவுக் கோலம் பூண்டு, மூலையில் முடங்கிக் கிடந்தன. குவளை மலர்கள் கண் திறந்து பார்க்க மறுத்து விட்டன.

தாமரை மலர்கள் தடாகங்களில் தலை காட்டத் தவறி விட்டன; பாவையர் மொழிகளைப் பேசி, இச்சைப்படி மகிழும் பச்சைக் கிளிகள் மௌனம் சாதித்தன. மகளிர் பூ இல் வறுந் தலையராயக் காட்சி அளித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு ஆட்டுக் கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்க கூடாது.

– டானியல் டீஃபோ

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk


## ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்த்த படை

பங்குனி மாதம்
பகல் வழிப் போபவரை
பார்ப்பதும் பாவம் என்றார் – நம்
பழந் தமிழர்

வீட்டினில் இருக்கலாமென்றால்
மின்வெட்டோ ஏழரை என்றும்
பத்தாம் இடமென்றும் பதின் மூன்றென்றும்
இனி ஈர் பன்னிரெண்டென்றும் நகர்ந்தால்

சின்னஞ் சிறுசுகள் முதல்
முதியவர் வரை காற்றாடியின்றி
புளுங்கிக் கிடக்கின்றார்.

ஐயகோ!
குட்நைற்றும் இல்லாக் கொடுமையால்
நுளம்பும் குத்தி வதைக்க
உறங்குவதுதான் ஆகுமோ!

அதிகாலை எழுந்து சமையல் செய்து
பெற்ற பாலகரைப் பள்ளிக்கு அனுப்பி
தாமும் அலுவலகம் செல்வதென்றால்
எப்படி முடியும்.

காஸ் இல்லை
மண்ணெண்ணெய் தானுமில்லை
விறகுவைத்தெரிக்க
புகைக்கூடும் கட்டவில்லை
இதற்குள் குழாய்க் கிணறு வேறு
சொல்லிமாளாத் துன்பம் ஐயா!

யுத்த வெறி கொண்டவர்
சனநாயக விரோதி என்று
வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு பிரிட்டிஷ் குடிமக்கள்
உரைத்த வரலாறு
உணராத சிங்களப் பௌத்தர்காள்
கொண்டு வந்தீர் குடும்ப ஆட்சியை
குடிகள் கெட்டன கோனும் உடன் பிறந்தாரும்
அவர் மக்களும் உயர்ந்தனர்.

கொலைபுரிந்தவர்
தமிழ் மக்களை வெட்டிச் சரித்தவர்
இன்னும் பற்பல குற்றம் இழைத்தவர் என
அத்தனை பேருக்கும்
ஆளும் இனத்தின் பேரால்
அதிகாரம் பொருந்தியவர் ஒப்பமிட்டு
விடுதலையும் கொடுத்தார்
போதாக்குறைக்கு
குருந்தூர்மலையில், கன்னியா வெந்நீரூற்றில்
சிவசொத்தைத் தீண்டி
பிரித்தோதி புத்தரை இருத்த,
அந்தோ! சிவசொத்தை தீண்டிய பரிநாசம்
இருந்ததும் போய் பிச்சையெடுக்கும்
அவலத்தில் இலங்கைத் திருநாடு...

பிரித்தோதும் பெருமக்காள்
புத்தரின் போதனைகளைப்
புரிந்தோ காவி தரித்தீர்
பெற்ற பிள்ளையை இழந்து
காலம் முழுவதும் கண்ணீர் விடும்
தமிழ்த்தாயின் அவலம் அறியாத் துறவிகாள்
அதுவன்றோ செல்வத்தைத்
தேய்த்த படை என்றுணரும்

சிறைதனில் அடைபட்ட
தமிழ் அரசியல் கைதிகள்
வெந்துவிடும் பெருமூச்செனும்
அனல்காற்றன்றோ
உம் நீர்நிலைகளை எரித்து
மின்ஒளியைப் பறித்ததும்
உணரா பௌத்த பிக்குகாள்
நீவிர் பிரித்தோதி என்ன பயன்?

இனி சிங்களம், தமிழ், முஸ்லிம் அனைத்தும்
ஒன்றென்று பிரியாது ஓதும்
அதுவொன்று போதும் வஞ்சகர் போயகன்று
நெஞ்சுக்கு நீதியினர் வந்தாள்வர்
நாடு சிறப்புறும் மக்கள் இன்புறுவர் தாமே

# இது அரசியல் செய்யும் நேரம் அல்ல நாட்டை பற்றி சிந்தித்து உழையுங்கள்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. அனைவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

5,000 குளக்கட்டுகளை புனரமைக்கும் இரண்டாம் கட்டப் பணிகளில் கலந்துகொண்டு நேற்று அலரிமாளிகையில் வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாம் மிகவும் சிரமப்படுகிறோம். ஒரு நாடாக நாம் ஒரு தொற்று நோய்க்கு முகங்கொடுத்து வருவதுடன், வரலாற்றில் மிகவும் சவாலான நேரத்தை எதிர்கொள்கிறோம். உள்ளூர்வாதத்திற்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமே எங்கள் நோக்கம்.

இன்று மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். இவை நமக்குத் தெரியாதா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று உள்ளார்களா? என்று சிலர் கேட்கிறார்கள்.

அதனால்தான் அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி நாட்டைப் பற்றி சிந்திக்கவும், அனைவரின் கருத்துக்களை கேட்டறிந்து, இந்த நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான தளமொன்றை நிர்மாணித்தோம்.

கோவிட் தொற்று நம்மால் உருவாக்கப்பட்டது அல்ல. நாங்களே அதனை செய்தோம் என்று மக்களைத் தூண்டிவிட சிலர் முயற்சிப்பதைப் பார்த்தேன். எதிர்க் கட்சியில் இருந்தாலும் நல்ல யதார்த்தமான யோசனைகளை முன்வைக்க தயாராக உள்ளோம். இது அரசியல் செய்யும் நேரம் அல்ல. ஒவ்வொருவரும் நாட்டைப் பற்றி சிந்தித்து உழைக்க வேண்டிய தருணம் இது. எனவே, அனைத்துக் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களை அடுத்த முறை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

புத்தாண்டு காலம் நெருங்குகிறது. உண்மையான பிரச்சினையை பார்த்துக்கொண்டே நாளை எரிபொருள் இருக்காது. உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்று பொய்யான மாயைகளை உருவாக்குகிறார்கள்.

சில பிரச்சினைகள் சிலரின் நலனுக்காக மக்களுக்குத் தெரியாமல் உருவாக்கப்பட்டன. அதனால்தான் கூறினேன். நெருக்கடி இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஒரு அரசாங்கம் என்ற வகையில், உங்களின் சிரமங்களை போக்கவும் உங்கள் அன்றாட வாழ்க்கையை கட்டியெழுப்பவும் தேவையான ஆதரவை வழங்குவோம் என்று பிரதமர் கூறினார். (ம)

# கோவிட் தொற்றால் மேலும் 4 பேர் பலி

நாட்டில் மேலும் 4 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் நால்வரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16, 473 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# ரூ 50 மில்லியன் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

கிரான்பாஸ் பகுதியில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் வவுனியா பகுதியை சேர்ந்த 41 மற்றும் 43 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் இருந்து 50 மில்லியன் ரூபா பெறுமதியான 4.9 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை 01.04.2022 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்களில் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 11ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும் 13ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடபெறும். (ம)

# எரிபொருள் பாவனை 30 - 35 சதவீதம் உயர்வு

இலங்கையில் எரிபொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 30-35 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

2021 ஜனவரிக்குள் 139,000 மெட்ரிக் தொன் எரிபொருள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், 2022 ஜனவரியில் எரிபொருளின் பயன்பாடு 198, 000 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கத்திற்கு மாறான பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுமித் விஜேசிங்க, அவ்வாறு அதிகரிப்பதற்கான காரணத்தை ஆராய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# சத்திய தரிசனம்

## அழைத்தால் வரும் ஆண்டவன்



❖ கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்காக ஏங்குவதை விட கண்ணெதிரே வாழும் தெய்வீகமான தாயை வணங்குங்கள். தாயின் அன்பு கிடைத்தால், இறையருள் பூரணமாகக் கிடைக்கும்.

❖ உண்மையான பக்தியும், அசைக்க முடியாத நம்பிக்கையும் இருந்தால் கடவுளை விரைவில் காணும் பாக்கியம் கிடைக்கும்.

❖ வாழ்வில் எத்தகைய பிரச்சினை நேர்ந்தாலும் கவலை வேண்டாம். கடவுளின் பொறுப்பில் உங்களை முழுமையாக ஒப்படையுங்கள்.

❖ தொடக்கத்தில் யாராலும் பற்றற்ற நிலையில் சேவை செய்ய முடியாது. ஆனால், நாளடைவில் தன்னலமற்ற சேவையாற்றும் மனப்பான்மை படிப்படியாக உருவாகும். அதைவிட [illegible] மகிழ்ச்சி உலகில் வேறில்லை.

❖ குட்டிப்பூனையின் [illegible] ஒலி கேட்டு ஓடிவரும் தாய்ப்பூனை போல, பக்தனின் இதயத்தில் இருந்து எழும் குரலைக் கேட்ட மாத்திரத்தில் கடவுள் ஓடி வந்து விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத்தை வீழ்த்தியது ராஜஸ்தான்



புனே மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல் இருபது 20 கிரிக்கெட் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 61 ஓட்டங்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றிகொண்டது.

இதன் மூலம் 15 ஆவது ஐ.பி.எல் அத்தியாயத்தில் முதலாவதாக துடுப்பெடுத்தாடி மொத்த எண்ணிக்கையை தக்கவைத்து வெற்றிபெற்ற முதலாவது அணி என்ற பெருமையை ராஜஸ்தான் றோயல்ஸ் பெற்றுக்கொண்டது.

இந்த வருடம் நடைபெற்ற முதல் நான்கு போட்டிகளில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய அணிகளே வெற்றிபெற்றிருந்தது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ட்ரென்ட் போல்ட், ப்ராசித் க்ரிஷ்ணா ஆகிய இருவரின் வேகப்பந்து வீச்சில் தடுமாறிப்போன சன்ரைசர்ஸ் ஹைதராபத் அணி, ஐ.பி.எல் வரலாற்றில் பவர்ப்ளேயில் மிகக் குறைந்த எண்ணிக்கையை (14 - 3 விக்.) பதிவு செய்திருந்தது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியினால் நிர்ணயிக்கப்பட்ட 211 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

மத்திய வரிசை மற்றும் பின்வரிசை வீரர்கள் மூவரின் நிதானமான துடுப்பாட்டங்களின் உதவியுடனேயே இந்த மொத்த எண்ணிக்கையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் பெற்றது.

ட்ரென்ட் போல்ட், ப்ராசித் க்ரிஷ்ணா, யுஸ்வேந்த்ர சஹால் ஆகியோரின் பந்துவீச்சுகளில் பெரும் தடுமாற்றம் அடைந்த சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 16ஆவது ஓவரில் 6 விக்கெட்களை இழந்து 78 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இதில் ரொமாரியோ ஷெப்பர்ட் பெற்ற 24 ஓட்டங்களே அதிகூடிய எண்ணிக்கையாக இருந்தது.

ஆனால், அதன் பின்னர் அதிரடியில் இறங்கிய ஏய்டன் மார்க்ராம், வொஷிங்டன் சுந்தர் ஆகிய இருவரும் 7 ஆவது விக்கெட்டில் 19 பந்துகளில் 55 ஓட்டங்களைப் பகிர்ந்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ஓரளவு ரண் எண்ணிக்கையைப் பெற உதவினர்.

இதில் வொஷிங்டன் சுந்தர் மாத்திரம் 14 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 2 பவுண்ட்றிகள் அடங்கலாக 40 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் கடைசி 26 பந்துகளில் 71 ஓட்டங்களை குவித்திருந்தது.

ஏய்டன் மார்க் ராம் 41 பந்துகளில் 5 பவுண்ட்றிகள், 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.

ராஜஸ்தான் பந்துவீச்சில் யுஸ்வேந்த்ர சஹால் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ப்ராசித் க்ரிஷ்ணா 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ட்ரென்ட் போல்ட் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது. இதில் மொத்தமாக 16 பவுண்ட்றிகளும் 14 சிக்ஸர்களும் அடங்கியிருந்தன.

இதன் பிரகாரம் பவுண்ட்றிகளில் மாத்திரம் 148 ஓட்டங்கள் மொத்த எண்ணிக்கைக்கு சேர்ந்தன.

துடுப்பாட்டத்தில் முதல் 5 வீரர்களும் தங்களாலான அதிகபட்ச பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

ஜொஸ் பட்லர் (35), யஷஸ்வி ஜஸ்வால் (20) ஆகிய இருவரும் பவர்ப்ளேயில் 58 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். 7ஆவது ஓவரின் முதல் பந்தில் ஜஸ்வால் ஆட்டமிழந்த பின்னர் 9 ஆவது ஓவரின் முதல் பந்தில் பட்லரும் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து 3 ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் சஞ்சு செம்சன், தேவ்தத் படிக்கல் ஆகிய இருவரும் 73 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

செம்சன் 27 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 3 பவுண்ட்றிகளுடன் 55 ஓட்டங்களையும் படிக்கல் 29 பந்துகளில் 4 பவுண்டறிகள், 2 சிக்ஸர்களுடன் 41 ஓட்டங்களையும் குவித்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஷிம்ரன் ஹெட்மியர் 13 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பவுண்ட்றிகளுடன் 32 ஓட்டங்களையும் ரெயான் பராக் 9 பந்துகளில் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உம்ரன் மாலிக் 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தங்கராசு நடராஜன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2547

### முகுந்தன்

சந்தேகம்!



கொசுவுக்கு மட்டும் எல்லா குருப் இரத்தமும் ஒத்துக்குதே எது எப்படி???

### ராதிகா

மாசமானா செல்லுக்க ரீசார்ஜ் பன்னவே நாக்கு தள்ளிடுது



அதுக்கு போய் எவண்டா ஈசினு பேர் வச்சது

### ரூபன்

500 ரூபாய்க்கு சில்லறை கேட்டால் சில்லறை இல்லை ஹர்லிக்ஸ் பாட்டில் தரவா? என்று கேட்குறாங்க



அடேய்... 1 ரூபாய் சில்லறை இல்லை என்று சாக்லேட் கொடுத்தப்பவே உங்களை கண்டிச்சிருக்கனும்டா

### சுரேக்கா



உங்க கணவர் உறவுக்காரங்க வந்தா நீங்க சரியா கவனிக்கிறது இல்லையாமே? ஏன்?
அவர் பொய் சொல்லுறார் மேடம்...
என்னோட மாமியாரை விட அவரோட மாமியாரைத்தான் நல்லா கவனிப்பேன்

### திலீபன்

ஊர் உலகமே சேர்ந்து துப்பினாலும் விற்பனையை நிறுத்துவதில்லை



Toothpaste தயாரிப்பாளர்கள்

### மலர்

அண்ணா கடை தோசைக்கும் வீட்டு தோசைக்கும் என்னென்ன வித்தியாசம்...



அடேய் விளக்கமாத்தால அடிச்சிட்டு ஊத்துனா அது கடை தோசை
தோசையை ஊத்திட்டு விளக்கமாற எடுத்தா அது வீட்டு தோசை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 13 மணிநேர...

அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன் பாடு ஆணைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது.

தற்போது நிலவும் கடும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அனல் மின் நிலையங்களை இயக்கு வதற்கு தேவையான டீசல் மற்றும் உலை எண்ணெய் கையிருப்பில் இல்லாத கார ணத்தினால் இலங்கை மின்சார சபை யினால் இந்த மாதம் 5 ஆம் திகதி வரை இவ்வாறான மின்வெட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 15 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண் டிக்கப்படும் என இலங்கை மின்சார சபை யின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித் தார். (ம)

## புதுக்குடியிருப்பு...

துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று காலை 11.30 மணியளவில் ஏ9 வீதியில் இடம் பெற்றுள்ளது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கழிவகற்றும் உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அதே திசை யில் பயணித்த சொகுசு பேருந்து மோதி யுள்ளது.

குறித்த விபத்தில் உழவு இயந்திரம் பலத்த சேதங்களுக்குள்ளாகி தடம்புரண் டுள்ளது. இதன்போது உழவு இயந்தி ரத்தை செலுத்திய சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாய மடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் மணவாளன்பட்ட முறிப்பு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஜெயராம் பிரசாத் என்ற இளம் குடும்பஸ் தர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் புதுக்குடியிருப்பு பிரதேச சபை யில் சாரதியாக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அதேவேளை படுகாயம் அடைந்த மற் றைய மூவரும் சுகாதார சிற்றூழியர்களா வர். படுகாயமடைந்த மூவரும் கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசா ரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-100)

## உஷ்ணம் அதிகரி...

திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் இன்று அதிக வெப்பநிலை காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறி வித்துள்ளது.

மனித உடலால் உணரப்படும் வெப்ப நிலை "எச்சரிக்கை" மட்டத்திற்கு அதிக மாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படு வதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள் ளது.

எனவே அனைவரும் அதிகளவு நீரை பருகுவதோடு வெளியில் செல்வது தவிர்ப் பது நல்லது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பொருளாதார...

போதிலும், பிம்ஸ்டெக் நாடுகளின் எதிர் காலம் தெளிவாகவும் வலுவாகவும் இருப் பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலு வல கத்தை மையமாகக்கொண்டு, இணைய வழியாக இடம்பெற்ற "வங்காள விரிகுடா சார்ந்த பல்தரப்பு தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு" (பிம்ஸ்டெக்) அமைப்பின் ஐந்தாவது அரச தலைவர் களின் மாநாட்டில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்தியத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும். ஏறக்குறைய இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு புத்துயிர் பெற்ற சுற்றுலா கைத்தொழி லானது பிம்ஸ்டெக் நாடுகளுக்கு பாரிய ஊக்கத்தை அளிக்கிறது. எனவே சுற்றுலா கைத்தொழில் தொடர்பில் பிம்ஸ்டெக் நிகழ்ச்சி நிரலில் முக்கிய அவதானம் செலுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

வங்காள விரிகுடா பிராந்தியம் உலக உறவுகளுக்கும் வர்த்தகத்திற்கும் மிகவும் முக்கியமானது. இதன்மூலம் சர்வதேச கப்பல் பாதைகள் உலகப் பொருளாதாரத் தின் இதயம் செயற்படுவதற்கு உதவும். கடல் பிராந்தியத்தைப்போன்று நாடுகளுக் கும் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தணிக்க கடல்சார் நாடுகள் ஒன்றிணைந்து செயற் பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கிடை யிலான புலனாய்வுத் தகவல் பகிர்வு மற் றும் அரசாங்கங்கள், சர்வதேச நிறு வனங்களுக்கு இடையிலான ஒத்துழைப் பின் அவசியத்தை விளக்கிய ஜனாதிபதி, இதன்மூலம் அனைத்து நாடுகளின் நலனுக்காக பிராந்தியத்தின் பாதுகாப்பை மேம்படுத்த முடியுமென்றும் சுட்டிக்காட்டி னார்.

உலகத் தொற்றுநோயைப் போலவே, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக இப்பிராந்திய மக்க ளின் வாழ்வாதாரம் பாதித்துள்ளது. இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட தயாராக இருக்க வேண்டும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரி[illegible] அமைப்பின் 14 [illegible] ஒத்துழைப்பை முழுமையாக செயற்படுத்த அனைத்து உறுப்பு நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும்என்றும்ஷேக்ஹசீனா குறிப்பிட்டார். (ம)

## நாளை என்ன...

பார்க்க வேண்டுமெனவும்தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் செல்வது பொருத்தமானது அல்ல எனவும், பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## சில நாட்களுக்...

கின்றன.

இதனிடையே இன்று காலை 8 மணி முதல் நள்ளிரவு வரை நாடளாவிய ரீதி யில் 13 மணித்தியாலங்கள் மின்வெட் டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க இரண்டு நாள் விடுமுறையை அறிவிக்குமாறு அர சாங்கம் அறிவுறுத்தியுள்ளதாக அறியமுடி கின்றது. (ம)

## கலந்துரையாடல்...

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரைவிட தற்போதைய ஜனாதிபதி வித்தியாசமானவர். இதனைத் தெரிந்து கொண்டே நாட்டு மக்கள் அவருக்கு வாக்களித்தனர். எவ்வாறாயினும் பிரச்சினை ஒன் றுக்கு தீர்வைவழங் கும்போது அந்த தீர்வே பாரதூர மான பிரச்சினை யாகி விடுவதாக வும் தெரிவித்தார்.

நான் என்ற வச னங்களை ஜனாதி பதி பயன்படுத்து கிறார். நான் செய்ய வில்லை. பிரச் சினைகளுக்கு நான் காரண மில்லை. பிரச்சி னைகளை நான் உருவாக்கவில்லை என்றே கூறுகிறார். உண்மையில் நான் என்பதற்குப் பதிலாக அவர் நாம் என்றே பயன்படுத் துவது பொருத்த மானது எனவும் தெரிவித்தார். (ம)

## பிரச்...

னும் கிராமத்துக் குச் செல்ல முடி கின்ற போதிலும் மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு வருத்தமடைவதா கவும் அவர் தெரி வித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அர சிலுள்ள எவரும் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை எனவும், பிரச் சினைகளுக்குத் [illegible] மிகவும் அவசிய மானது எனவும் கூறியுள்ளார்.

அரசாங்கத்திடம் நிதியைக் கடுமை யாகக் கையளிப்பதை எண்ணெய் மற்றும் எரிவாயு வரிசையில் நிற்கும் மக்கள் நன்கு அறிந்திருந்த போதிலும் அதற்கு அரசு வழங்கும் பதில்கள் போதுமானதாக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அரசிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் சமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (ம)

## 250 மில்லியன்...

வழங்கிய முந்தைய 250 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு மேலதிகமாக, இந்த கடன் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முந்தைய கடனை திருப்பிச் செலுத்தும் காலம் பங்களாதேஷ் வங்கியால் நீடிக் கப்பட்டதையும் வெளியுறவு அமைச்சர் உறுதிசெய்தார்.

மற்றொரு கடனுக்கான சமீபத்திய கோரிக்கை தற்போது பரிசீலனையில் உள்ளது என்று அப்துல் மொமன் மேலும் கூறினார்.

பங்களாதேஷ் நிலைமையைக் கண் காணித்து வருவதாகக் கூறிய அவர், நிலைமை எவ்வாறு உருவாகும் என் பதையும் அவர்கள் மதிப்பீடு செய்து வருவ தாகவும், நிலைமையைப் பொறுத்து இலங்கையின் கோரிக்கை குறித்து முடி வெடுக்கப்படும் என்றும் கூறினார். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1230
வெற்றி இலக்கங்கள்
கன்னி 1 5 5 5 9 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1070
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
T 24 28 37 49 50

மஹஜன சம்பத
திகதி 2022/03/30
சீட்டிழுப்பு இலக்கம் 4722
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 4 6 7 8 6 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.03.30
சீட்டிழுப்பு இலக்கம் - 752
Y 27 41 55 60
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 02 05 38 55 56
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 875
திகதி 2022.03.30 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 227,478,643
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1699
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 30
தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
U 07 56 65 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 55,453,801/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.30
சீட்டிழுப்பு இல: 3860
வர்ணம்: ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,530,500/-
வெற்றி இலக்கங்கள்
18 21 23 63
ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,250,809/-
திகதி 2022-03-30
சீட்டிழுப்பு வாரம் 3411
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 26 36 46 49
கடகம்
8 9 5 5 8 8 0
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,166,200/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1824
சீட்டிழுப்பு திகதி 2022 / 03 / 30
வெற்றி இலக்கங்கள்
12 24 60 67
ஆங்கில எழுத்து J
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 33,113,832/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.30
சீட்டிழுப்பு இல: 1525
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,640,900/-
வெற்றி இலக்கங்கள்
19 25 64 67
ஆங்கில எழுத்து K
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவளையில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன் பாரிய ஆர்ப்பாட்டம்

## மன்னிப்பு கோரினார் அமைச்சர் நாமல்



(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வருகை தரவுள்ளார் என்ற செய்தியைக் கேட்டு, பண்டாரவளையில் வீதியை மறித்து கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால், பதுளை-பண்டாரவளை வீதியில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

எனினும், பண்டாரவளைக்கு விஜயம் செய்திருக்க திட்டமிட்டிருக்கவில்லை என நாமல் டுவிட் செய்துள்ளார்.

நாமலின் வருகை காரணமாக வெலிமடையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வரிசையில் நின்றிருந்த சிலர் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியதாக இணையத்தில் பகிரப்பட்ட காணொளிக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"வெலிமடையில் நான் திட்டமிடப்பட்ட நிகழ்வு எதிலும் கலந்து கொள்ளவில்லை, இது ஒரு தவறான புரிதல் மற்றும் வதந்தி" என்று அமைச்சர் டுவீட் செய்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் அப்பகுதிக்கு வருவதாகக் கூறப்படும் தகவலையடுத்து வாகனங்கள் உட்பட வரிசையில் நின்ற பொதுமக்கள் வேறு பாதைக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக நாமலை கடுமையாக திட்டிய மக்கள், நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து அரசாங்கத்தையும் கண்டித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோரினார். மக்களுக்கு ஏற்பட்டுள்ள அனைத்து அசௌகரியங்களுக்கும் முதலில் தாம் மன்னிப்புக் கோர விரும்புவதாகக் கூறிய அமைச்சர், இது கடினமான காலங்கள், ஆனால் "நாங்கள் அவற்றை சமாளிப்போம்" என்று தான் நம்புவதாகக் கூறினார்.

வெலிமடையில் தமக்கு திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் எதுவும் இல்லை என்று மேலும் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, இது தவறான புரிதல் மற்றும் வதந்தி என கூறினார். (ம)

# ஔடதங்களை பெற்றுக்கொள்ள தொடர்ச்சியாக ஒத்துழையுங்கள்

## உலக வங்கியிடம் இராஜாங்க அமைச்சர் சன்ன

இலங்கைக்கு தேவையான ஔடதங்களை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன உலக வங்கியிடம் கோரியுள்ளார்.

உலக வங்கியின் தெற்காசிய வலயம் தொடர்பான பணிப்பாளர் லினோ ஷேர் பன் பென்ஸ் உள்ளிட்ட விசேட பிரதிநிதிகளை நேற்று சந்தித்தபோதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் ஔடதங்களை வழங்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதாக உலக வங்கியின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

இலங்கையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் வெற்றிகரமாக இடம்பெறுவதை உலக வங்கியின் தெற்காசிய வலய பணிப்பாளர் வரவேற்றுள்ளார்.

பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும்போது உலக வங்கி இலங்கைக்கு வழங்கிய நிதியுதவிகளுக்காக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதன்போது நன்றிகளை தெரிவித்துள்ளார். (ம)

# 168 தொற்று

நாட்டில் நேற்று மேலும் 168 பேருக்கு கோவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

அதற்கமைய நாட்டில் கோவிட்-19 தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 661,453 ஆக உயர்ந்துள்ளது.

தொற்றுறுதியான 7, 593 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10847)
076 825 7716 (ஆகாஸ்)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஏ-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50 மீற்றர் தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி )
- 20 அடிப் பாதையுடன்
(10848)
077 623 4204

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 82 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து 50 m நடைதூரம்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 308 தென்னைகள் உள்ளன.
(10845)
தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
ஒரு பரப்பின் விலை ரூ.450,000
ஜெயம் - 077 814 7389
077 241 7589

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 90 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)
- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்
(10848)
ஒரு பரப்பின் விலை -
3 இலட்சத்து 50 ஆயிரம் மட்டும் (350,000)
074 291 3725, 074 291 3726, 074 291 3727

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
**யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகைத் தொழிலாளர் சங்கம்**
**கௌரவிப்பு விழா**
2021 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளிற்கு மேல் பெற்ற விஸ்வகுல நகைத் தொழிலாளர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்கவுள்ளோம்.
உங்கள் விண்ணப்பங்களை 08.04.2022 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகைத் தொழிலாளர் சங்கம்
[illegible]
யாழ்ப்பாணம்.
ஜெ. மனோகர்
செயலாளர்
077 222 8482
(10845)

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4072)
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்.
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**காணி விற்பனைக்கு**
யாழ். இந்துக் கல்லூரிக்கு மிக அருகில் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- சுற்று மதில்
- தனி வெட்டுக் கிணறு
- மலசலகூடம் என்பன உண்டு
(10841)
076 962 8423

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
02.04.2022
வங்கியியல் கற்கைநெறிகள்
BANKING COURSES
IABF & DABF
கணக்காளர் கற்கை நெறிகள்
CHARTERED ACCOUNTING COURSES
Business Level - i, ii
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
CERTIFICATE COURSE IN ENGLISH
Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
(C-4088)
021 222 3382, 021 222 9149, 077 440 5917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.